**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.25
https://ngmtamil.in/

# ஊராளிக்கவுண்டரின் நம்பிக்கைகள்

**ரமேஷ். ல,**

தமிழ் - பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர், Reg . No. B1/ TAM24PJULY1132/2024

நிர்மலா மகளிர் கல்லூரி ( தன்னாட்சி), (பாரதியார் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது)

அலைபேசி எண் – 9994729704, மின்னஞ்சல் - rnpl393@gmail.com

**முனைவர் மகேஸ்வரி. ப.** நெறியாளர், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறைத்தலைவர்

நிர்மலா மகளிர் கல்லூரி ( தன்னாட்சி), கோயம்புத்தூர் - 18.

அலைபேசி எண் – 9952705617

**முன்னுரை**

மனிதனுடைய வாழ்க்கைக்கு மையமாகத் திகழ்வது நம்பிக்கை ஆகும். நம்பிக்கை என்பது மனிதனுடைய உள்மனத்தின் செயல்பாடாகும். மனிதனுடைய மனதில் மனசாட்சி என்ற ஒன்று இல்லாவிட்டால் இந்த உலகம் இருண்டு போகும். மனசாட்சியின் ஒரு உண்மையான வெளிப்பாடாகும். ஒரு செயல் நல்லதா கெட்டதா என்று யோசிக்காமல் வயதில் மூத்தோர் சொன்னதை அப்படியே பின்பற்றுவதாகும். பழங்காலத்தில் மனிதர்கள் இயல்பு நிலைக்கு மாறுபட்ட நிகழ்வுகளைக் கண்டு நமக்கு மேலே ஒரு சக்தி உள்ளது என்று உணர்ந்திருப்பான். பாரம்பரியம், தெய்வ வழிபாடு, வானிலை, திருமணம், பிறப்பு, இறப்பு, ஆகிய சடங்குகளில் நமது முன்னோர்கள் சில நெறி முறைகளைக் கடைபிடித்து வந்ததை நாமும் அப்படியே செய்வதாகும். மூத்தோர் சொல் கேல், தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை என்ற பழமொழிக்கு ஏற்ப அவர்கள் சொன்னதை அப்படியே செய்வதை நம்பிக்கை எனலாம்.

**நம்பிக்கைகள்**

மனிதர்களிடம் நம்பிக்கைகளை ஏற்படுத்துவதற்கு நிறைய ஆதாரங்கள் உள்ளன. நாட்டுப்புற நம்பிக்கைகளுக்கு பலவகையான ஆதாரங்களைக் கூறலாம். பில்லி, சூனியம், ஏவல், நாட்டுப்புற சித்த மருத்துவம், ஆகிய இவைகளிலிருந்து மக்கள் தங்களை பாதுகாத்து கொள்வதற்காக பின்பற்றப்பட்ட செயல்முறைகளில் இருந்து தான் நம்பிக்கைகள் தோற்றம் பெற்றன. இரவில் பழைய துணிகளை தானமாக தந்தால் அதை வாங்குபவருக்கு தீமைகளை ஏற்படுத்த முடியும் என்பது

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

போன்ற காரணங்களினால் நம்பிக்கைகள் உருவாகின. ஊராளிக் கவுண்டர் இன மக்களிடம் காணப்படும் நம்பிக்கைகள் பற்றியச் செய்திகள் கீழே விளக்கப்பட்டுள்ளன.

**திசையின் நம்பிக்கைகள்**

உடும்பு, பாம்பு குறுக்கே போகக் கூடாது.முயல், பூனை செல்லும் வழியில் குறுக்கே செல்லுதல் காரியம் தடைபடும்.

“பூனை குறுக்காட்டி

புதுப்பானை அகாச்சவனம்”

என்று தகவலாளர் ஜெயராஜ் கூறியுள்ளார்.

**இடி பற்றிய நம்பிக்கைகள்**

இடி கடுமையான சத்தத்துடன் மின்னலுடன் ஏற்படும் போது மக்கள் அச்சப்பட்டு இடியானது தனது விழுந்து விடக் கூடாது என்பதற்காக கீழ்க்கானும் பழமொழியினைக் கூறுவார்கள்.

‘ஆத்திப் போத்து அர்ச்சுணன் போத்து’

என்று தகவலாளர் வேலன் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டு நபர்கள் தங்களுக்குள் பிடிக்காமல் சண்டை போட்டு கொள்ளும் போது கோபத்தில் வெள்ளை இடியானது தலையின் மேல் விழுந்து விடும்; என்பர்.

‘வெள்ளி இடி விழுவ’

என்று தகவலாளர் வேலுச்சாமி குறிப்பிட்டுள்ளார்.

**வார்த்தை பற்றிய நம்பிக்கைகள்**

பொய்யான வார்த்தையை சொன்னால் சாமி கண்ணை குத்திவிடும் என்று சிறு பிள்ளைகளிடம் கூறுவார்கள். அப்படியே பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டும் என்பார்கள்.

‘ஆகாசப் பொய் அழுகினிப் பொய்’

என்று தகவலாளர் குமார் கூறியுள்ளார்.

கிராம பஞ்சாயத்துகளில் ஊர் நாட்டாண்மைக்காரர் கூட்டத்தில் பேசி இருவருக்கும் பாரபட்சம் இல்லாமல் நடுவுநிலைமையுடன் தீர்ப்பு கூறுவார். அப்பொழுது யாருக்கும் பாரபட்சம் பேச கூடாது என்பார்கள்.

‘பாரபட்சம் பேசினால் பச்சை மரம் ஒடிந்து விழுவ’

ஒருதலை பட்சமாக பேசினால் பச்சை மரம் முறிந்து விடும் என்று தகவலாளர் வேலுச்சாமி கூறியுள்ளார்.

**தேரை(தவளை) பற்றிய நம்பிக்கைகள்**

தேரை கத்தினால் மழை வரும் என்பார்கள.; சில்லு வண்டு கத்தினால் மூனாவது நாள் மழை வரும் என்பர். சொறி கொரட்ட தவளை கத்தினால் மழை கண்டியப்பாக வரும். இதனுடைய சத்தத்தில் வித்தியாசம் காணப்படும். தேரை தண்ணீர் உடம்பில் பட்டால் சொறி சிரங்கு வரும் என்பார்கள்.

**குழந்தை பற்றிய நம்பிக்கைகள்**

தலைப்பிள்ளை பெண் பிள்ளையாக பிறந்தால் அந்த குடும்பத்திற்கு செல்வத்தை தேடி தரும். இரண்டாவது பிள்ளை ஆண் பிள்ளையாக பிறந்தால் குடும்பத்திற்கு நல்லது. மூன்று பிள்ளை இருந்தால் உடனே காதுகுத்தி மொட்டை எடுக்க வேண்டும்.

**மழை பற்றிய நம்பிக்கைகள்**

சனி மூலையில் மின்னினால் நல்லது.பங்குனி,சித்திரை, வைகாசி, மூன்று மாதமும் தெற்கு வடக்கில் மின்னினால் நல்லது.புரட்டாசி, ஐப்பசியில் வீர மூலையில் மின்னினால் உடனே மழை வரும் என்பார்கள்.கார்த்திகை, மார்கழி மாதங்களில் கிழக்கு மூலை மின்னினால் மழை வரலாம் என்பது ஐதீகமாகும். ஆடி, ஆவணி, மாதங்களில் எந்த பக்கம் வேண்டுமானாலும் மின்னினாலும் மழை வரும் என்பார்கள்.

**கிழமை, மாதம் பற்றிய நம்பிக்கைகள்**

வெள்ளிக்கிழமை கோயிலுக்கு போய் சாமி கும்பிடுவது நல்லது. அதாவது சிலப்பதிகார காப்பியத்தில் கண்ணகி தனது கணவன் கொளை செய்யப்பட்டதால் மதுரையை தீயால் எறித்த நாள் வெள்ளிக் கிழமை ஆகும். அதனால் தான் மக்கள் வெள்ளிக் கிழமை கோயிலுக்குச் செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். பங்குனி முருகனுக்கும் கார்த்திகை ஐயப்பனுக்கும், ஆடி கருப்பசாமி கோயில் கிடா வெட்டுக்கும், விதைப்புக்கும், சித்திரை கோயில் திருவிழாவுக்கும், ஏற்ற மாதங்களாகும்.

**பல்லி பற்றிய நம்பிக்கைகள்**

வீட்டிற்கு மேல் புறம் சொன்னால் நல்லது. கோயிலில் சாமி கும்பிடுவதற்கு முன்பு அனைத்து ஊர் நாட்டாண்மை, முக்கியஸ்த்தர்களும், பங்காளிகளும் தலை குளித்து காவி வேஷ்டியை அணிந்து கொண்டு கோயிலுக்கு அனைவரும் வந்த பிறகு சாமிக்கு தேவையான பொருட்களை வைத்து தெய்வத்தின் பெயரை சொல்லி பல்லி சயனம் சொல்லி சாமி நன்றாக நடக்க வேண்டும் என்று கூறி அனைவரும் உட்காருவார்கள். அவ்வாறு கோயிலில் உள்ள பல்லியானது குதிரையின் மீது உட்கார்ந்து சத்தம் போட்டால் மட்டுமே திருவிழாவினை நடத்துவார்கள். அவ்வாறு பல்லி சயனம் சொல்லவில்லை என்றால் உடுக்கடி பூசாரியை வரவழைத்து என்ன குற்றம் என்பதை கண்டுபிடித்து அதற்கு பரிகாரம் செய்தால் பல்லி சயனம் சொல்லி விடும் என்பார்கள். பொருளீட்டச் சென்ற

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

தலைவனைக் காணாது இருக்கும் போது அந்த சமயத்தில் அவளது வீட்டில் பல்லியின் சப்தத்தைக் கேட்டு தலைவன் மீண்டும் வருவது உறுதி என்று தோழி தலைவிக்கு ஆறுதல் கூறுகின்றாள்.

இதனை

‘நெடுஞ்சுவர்ப் பல்லியும் பாங்கில் தேற்றும்;’ ( நற். பா. 246, 2)

என்ற இந்தப் பாடல் பல்லியின் சகுனம் தலைவியின் மனநிலைக்கு எடுத்துக்காட்டாகக் கூறப்பட்டுள்ளது.

**இறப்புத் தொடர்பான நம்பிக்கைகள்**

ஒரு இடத்திற்குச் செல்லும் போது வழியில் பிணத்தை பார்த்துச் சென்றால் சென்ற காரியம் வெற்றியடையும். வெள்ளிக் கிழமை இறந்துவிட்டால் அவர்களுடைய பொருளும் சேர்ந்து போய் விடும் என்பார்கள். சனிப் பிணம் போகும் போது சும்மா போகாது கூடவே ஒரு பிணத்தை கூட்டிக் கொண்டு போகும் என்பார்கள். சவ ஊர்தியை மட்டும் பார்த்து சென்றால் சென்ற காரியம் தடைபடும். பிணத்தை நல்ல நேரத்தில் தூக்கினால் அவர்கள் சொர்க்க லோகமும், எமகண்டம் நேரத்தில் தூக்கினால் நரகத்திற்கு சென்று விடுவார்கள்.

வயதில் மூத்தவர்கள் இறந்துவிட்டால் அவர்களது கால் தொட்டு கும்பிட்டுக் கொண்டால் அவர்களின் ஆசீர்வாதம் தங்களுக்கு கிடைக்கும.; இழவு வீட்டில் இடுப்பில் கட்டிய துண்டை அவிழ்க்க கூடாது. இழவு வீட்டின் உள்ளே செறுப்பை போடக் கூடாது. உருமா கட்டுதல் கூடாது. சட்டையை கழட்டாமல் வீட்டின் உள்ளே சென்றால் ஊர் நாட்டாண்மைக்காரர் முன்னிலையில் அபராதம் கட்ட வேண்டும். எட்டு கலைக்கும் உரிமை நாட்டான் சாம்பானுக்கு மட்டுமே உரியது. இவைகள் ஊராளிகளின் மரபு முறையாகும்.

**பறவை தொடர்பான நம்பிக்கைகள்**

கருங்காக்கை கத்தக் கூடாது. புரட்டாசி மற்றும் விரத நாட்களில் வீட்டின் மேற் கூரையில் காகத்திற்கு சோறு போடுவார்கள். கழுத்தில் மடடும் வெள்ளை நிறம் கொண்ட காகமே சோற்றை எடுத்து சாப்பிட வேண்டும். மாறாக மண்டங் காக்கை எனப்படும் கருங்காக்கை வந்தால் சோற்றை எடுக்க விட மாட்டார்கள். இரவில் ஆந்தை அலறல் கூடாது. கூகை கூவக் கூடாது.

‘ஆற்றுஅயல் இருந்த இருந்தோட்டு அம்சிறை
நெடுங்கால் கணத்துள் ஆள்அறி வுறீஇ…
மலையுடைக் கானம் நீந்தி….. (குறு. 350)

வழியில் நடந்து செல்லும் வழிப்போக்கர்களுக்கு கள்வர்கள் அச்சுறுத்தல்கள் நிகழும் என்பதை கணந்துள் பறவை ஒலியை எழுப்புகின்றன. வீட்டில் வௌவால் தங்கக் கூடாது. மயில் குறுக்கே சென்றால் முருகனது அருள் கிடைக்கும் என்று கூறுவார்கள்.

**வீடு பற்றிய நம்பிக்கைகள்**

வீட்டின் வாசலானது கிழக்கு, வடக்கு, தெற்கு பக்கம் பார்த்தவாறு இருக்க வேண்டும். வீடு கட்டுவதற்கு முன்னர் சனி மூலையில் ஒரு பூஜ்ஐ போட்ட பின்னரே வீடு கட்ட ஆரம்பிக்க வேண்டும். வீட்டில் கட்டப்படும் படிகள் ஒற்றை படையில் அதாவது மூன்று, ஐந்து, ஏழு ஆகிய எண்ணிக்கையில் கட்டினால் நல்லது. வீட்டின்; மெத்தை படிகள் கிழக்குப் பக்கத்தில் வைத்து கட்டினால் நல்லது என்கின்றார்கள்.

**விருந்தினர் பற்றிய நம்பிக்கைகள்**

காக்கை கத்தினால் உறவினர்கள் தங்களது வீட்டிற்கு வருவதுண்டு என்பது ஐதீகமாகும். வீட்டில் விருந்தினர் உணவை சாப்பிட்ட பின்னர் இலையினை முன்புறமாக மடித்தால் மறுபடியும் விருந்து கிடைக்கும் என்றும் மாறாக இலையை வெளிப்புறமாக மடித்தால் மீண்டும் விருந்து கிடைக்காது. ஞாயிறு, வியாழன் ஆகிய இரண்டு நாட்களில் உறவினர்களின் வீட்டில் சாப்பிட மாட்டார்கள். வீட்டிற்கு வந்த விருந்தினர் வீட்டை விட்டு வெளியே செல்லும் போது ஒரு பையில் ஏதாவது ஒரு பொருட்களை போட்டு தான் அனுப்ப வேண்டும். வெறுங் கையோடு அனுப்பக் கூடாது. விருந்தினரை வழி அனுப்பி வைக்கும் போது ஏழடி நடந்து சென்று வழியனுப்புவது ஊராளி இன மக்களின் பழக்க வழக்கமாகும்.

**மச்சங்கள் அங்கம் பற்றிய நம்பிக்கைகள்**

முதுகின் பின்புறம் கண்ணுக்குத் தெறியாத இடத்தில் மச்சமும், மூக்கின் மேல் மச்சமும் இருந்தால் அந்த நபருக்கு யோகம் கிடைக்கும். மனிதனது கை விரல் ஐந்தோடு ஒன்று சேர்ந்து ஆறு விரலாக இருந்தால் நல்லது நடக்கும். அதேபோல் நான்கு விரல் மட்டும் இருந்தால் அந்த நபருக்கு தீமையே நேரிடும் என்பார்கள்.

**பயணம் தொடர்பான நம்பிக்கைகள்**

ஒரு இடத்திற்கு செல்லும் போது தண்ணீர் நிரை குடத்தை கொண்டு செல்வதை பார்த்தால் நல்லது. சுமங்களியை பார்த்து சென்றால் நன்மை கிட்டும் என்பார்கள். வீட்டை விட்டு வெளியே போகும் போது இடது காலை வைத்து போக வேண்டும். அதேபோல் வீட்டின் உள்ளே வரும்போது வலது காலை வைத்து வரவேண்டும். விதவைகளை பார்த்துச் சென்றால் தீய சகுனம் என்பார்கள். நாய் ஊழையிட்டால் கெட்ட சகுனமாகும். வண்டியில் செல்லும் போது வண்டியில் பழுது ஏற்பட்டாலோ உடம்பில் ஏதும் காயம் ஏற்பட்டாலோ காரியம் தடைபடும் என்கின்றார்கள்.

**இரவு பகல் பற்றிய நம்பிக்கைகள்**

இரவு நேரத்தில் யாரும் அழுக கூடாது. தலை சீவ மாட்டார்கள், சாப்பிடாமல் தூங்கக் கூடாது. இரவு நேரத்தில் பெரும்பாலும் தலை மயிரை வெட்டக் கூடாது. உப்பு வாங்கவோ தானம் கொடுக்கவோ கூடாது. இரவு பன்னிரென்டு மணி அளவில் வீட்டை விட்டு வெளியே வந்தால் பேய், பிசாசு, மினி ஆகியவை தங்களைப் பார்த்தால் கொண்று விடும் என்பார்கள். மதிய நேரங்களில்

கேணி, குளங்களுக்கோ செல்ல கூடாது என்பார்கள். இரவில் கை நகங்களை வெட்டினால் அந்த வீட்டில் வறுமை ஏற்பட்டு விடும். நாய்கள் ஊளையிட்டால் தீயவை நடக்கப் போகின்றது என்பார்கள்.

**முடிவுரை**

ஊராளிக்கவுண்டர்களின் வாழ்க்கையில் திசை, இடி, தவளை, குழந்தை, கிழமை, மாதம், பல்லி, இறப்பு, பயணம், வீடு, விருந்தினர், மச்சங்கள், இரவு மற்றும் பகல் தொடர்பான நம்பிக்கைகள் முக்கிய இடம் பெற்றுள்ளன. இவை அவர்களின் மரபு ரீதியான அறிவாற்றலையும், பாரம்பரிய நம்பிக்கைகளையும் எடுத்துக்காட்டுவதாக உள்ளன.

**துணை நூற்பட்டியல்**

[1.] குறுந்தொகை – தமிழமுதன்

[2.] நற்றிணை மூலமும் உரையும் - வெங்கட்ராமன்